உ
சிவமயம்
கைலாசவிநாயகர் துணை



# இளையாத்தக்குடி கோவில்

# ஒக்கூர் நகரத்தார்

## கைலாசவிநாயகர் சதுர்த்தி திருவிழா அழைப்பிதழ்

எல்லாம் வல்ல மஹா கணபதியானவர் பாரததேசத்தின் ஆன்மீகமும், பக்தியும் நிறைந்த நகரத்தார் சீமையிலே, ஏழு பிரிவு கோயிலும், ஏழு ஊருணியுமாக இறைவனும், தேவர்களும் இளைப்பாறும் நகரத்தார் கோவில் நகரமான இளையாத்தக்குடி புண்ணிய ஷேத்திரத்தில் ஸ்ரீ கைலாச விநாயகராக எழுந்தருளி, ஒக்கூர் உடையார் மனம்குளிர்ந்து அருள்பாலிக்கும் ஸ்வாமிக்கு, தானமும் தர்மமும் இறைத்தொண்டும், தன் வாழ்வின் இலட்சியமாகக் கருதும் நகரத்தார் பெருமக்களின் சீரிய முயற்சியால் ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தி பெருவிழா நடைபெற்று வருகிறது.

அதைப் போலவே இந்த ஆண்டும் நடப்புக் காரியக்காரர்களின் முயற்சியில் இறை அருளால் நிகழும் மங்களகரமான சுபஸ்ரீ விசுவாவசு வருடம் **ஆவணி மாதம் 11ம் தேதி 27.8.2025 புதன்கிழமை** சுக்ல பட்சம் சதுர்த்தி திதியும், சித்திரை நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் விநாயகர் சதுர்த்தி விழா அன்று காலை **ஸ்ரீ கைலாச விநாயகருக்கு கணபதி ஹோமம், மஹாபிஷேகம், அஷ்டோத்திர ஸதகலச அபிஷேகம் முதலான ஆராதனைகளும் மாலை ஸ்ரீ விநாயகப் பெருமான் வெள்ளி மூஷிக வாகனத்தில் திருவீதி உலா காட்சியும்** இதன் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெறுவதால் நகரத்தார் பெருமக்களும், ஆன்மீக மெய்யன்பர்களும் கலந்து கொண்டு ஸ்ரீ கைலாச விநாயகரின் அருள்பெற்று,இக,பர,சௌபாக்கிய பேரானந்த பெரு வாழ்வு பெற வேண்டுகிறோம்.

**இளையாத்தக்குடி.**
**24.07.2025**

**இப்படிக்கு,**
**நடப்பு நிர்வாக காரியக்காரர்கள்**

## —: நிகழ்ச்சி நிரல் :—

### நாள்: 27–8–2025 புதன்கிழமை

| | |
|---|---|
| காலை 6.00 மணி | விநாயக பெருமான் வெள்ளி திருவாச்சி அங்கி, தந்தத்துடன் காட்சி தருதல் |
| காலை 7.00 மணி | உற்சவரை பெரிய கோவிலிருந்து அழைத்து வருதல் |
| காலை 9.05 மணி | அனுக்ஞை, சங்கல்பம், விக்னேஸ்வர பூஜை |
| காலை 9.30 மணி | அஷ்டோத்திர ஸதகலசா பூஜை, வேதிகா அர்ச்சனை |
| காலை 10.00 மணி | கணபதி ஹோமம், சோடச கணபதி மூல மந்திர ஹோமம் |
| காலை 11.00 மணி | பிரம்மச்சாரி பூஜை, கோபூஜை |
| காலை 11.30 மணி | பூர்ணாஹுதி, கடம் புறப்பாடு, 108 கலசாபிஷேகம், மகா தீபாராதனை |
| பகல் 12.45 மணி | பிரசாதம் வழங்குதல் |
| பகல் 2.00 மணி | நமது விடுதியில் 16 மங்கள பொருட்கள் ஏலம் |
| மாலை 4.00 மணி | விநாயகருக்கு சந்தண காப்பு அலங்காரம் |
| மாலை 4.30 மணி | மங்கள இசையுடன் **பல்நோக்கு பயன்பாட்டு மண்டபம்** திறப்பு விழா நடைபெறும். |
| மாலை 6.30 மணி | விநாயகப் பெருமான் வெள்ளி மூஷிக வாகனத்தில் திருவீதி உலா நடைபெறும். |